**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 -ம் நாள் புதன்கிழமை

**<u>O.S. No. 29 /2025</u>**

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW. 1 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவானந்தம் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | தர்மலிங்கம் | கிராமம் | : | ஏரந்தவாடி |
| | | | தொழில் | : | விவசாயம் |
| | | | வயது | : | 71 |

**<u>குறுக்கு விசாரணை</u>**

1ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது மகன் ஆவார். 2 ம் பிரதிவாதி எனது மருமகள் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி ஜானகிரமன் என்பவர் வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதி பெயருக்கு விற்பணை ஆவணம் எழுதிகொடுத்தவர் என்றால் சரிதான். 3 ம் பிரதிவதி 1ம் பிரதிவாதிக்கு எந்த தேதியில் விற்பணை ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் 2023 ம் ஆண்டு எழுதி கொடுத்தார் தேதி சரியாக நிலைவில்லை. நான் மேற்படி 3 ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த விற்பணை ஆவணத்ததை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணம் தான் அந்த விற்பணை ஆவணமா என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். வழக்கு விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் வழக்கு சொத்தை கிரயம் பெற்ற நாள் முதல் அனைத்து விவரமும் தெரியும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 21.06.2021 ல் 3 ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு விற்பணை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அந்த ஆவணத்தின் மீது சந்தேகமாக உள்ளது. எனக்கு 2023 என்றுதான் நினைவில் உள்ளது. 3 ம் பிரதிவாதி எதனடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்ததாக மேற்படி பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் பழநியய்யா தஞ்சராயர் அவர்களிடமிருந்து எனக்காக இளவர் காப்பாளர் என்ற முறையில் எனது தகப்பனார் அன்பழகன் கிரயம் பெற்று கிரய ஆவணம் குடவாசல் சார் பதிவாளர் அலுவலகத்தில் 1991 ம் ஆண்டு ஆவணம் எண். 261 ஆக பதிவுசெய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். (சாட்சி பி.வா.சா.ஆ 2 ஆவணத்தை வாதி வழக்கறிஞர் படித்து காண்பித்தபின் சரிதான் என்று சொல்கிறார்) 3 ம்பிரதிவாதியின் தகப்பனார் அன்பழகன் கிராமநிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தார் என்றால்

சரிதான். வழக்கு சொத்து குறித்து பி.வா.சா.ஆ 2 ஆவணம் ஏற்பட்ட பின்னிட்டு வாதி வழக்குசொத்தை ஆக்கிரமித்துள்ளார் என்று குடவாசல் வட்டாட்சியரிடம் மனு செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவினை குடவாசல் வட்டாட்சியர் விசாரணை செய்தார் என்றால் சரிதான்.

**(நீதிமன்ற அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.15 11:01:53 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.